24th March 1958]

THE HON. SRI P. KAKKAN : அரசாங்கம் நடத்துகிற பள்ளிக்கூடங்களில் எல்லாம் இப்பொழுதே அவ்வாறு சேர்த்துத்தான் கொடுக்கப்படுகிறது.

SRI K. ANBAZHAGAN : ஹரிஜன மாணவர்களுக்கு பகல் உணவு அளிப்பதற்கு ஒரு மாணவ்ருக்குக் கொடுக்கும் செலவுத் தொகை ரநன்கு புதுக்காசு அளவுக்குத்தான் என்று ஒதுக்கியிருப்பதாக தெரிகிறது ? அது உண்மையா ? உண்மையானால் போதுமா ? நடுப்பகல் உணவுக்கு ஒரு மாணவனுக்கு என்ன செலவு ஆகிறது என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI P. KAKKAN : அதற்குத் தனிக் கேள்வி போட்டால் நல்லது.

Electricity for irrigation purposes

*** 391 Q.—SRI V. SUBBIAH : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether, during the periods of electricity cut, arrangements are proposed to be made to stop the supply of electricity to agriculturists for irrigation purposes during nights and supply only during day time under shift system ?**

THE HON. SRI V. RAMIAH : No, Sir.

SRI V. SUBBIAH : விவசாய அபிவிருத்தி பலவகையிலும் பெருக வேண்டுமென்று சொல்லக்கூடிய நமது அரசாங்கம் விவசாயிகளுக்கு மாத்திரம் மின்சார வெட்டு செய்து இரவு காலங்களில் பாசனம் செய்ய வேண்டும் என்று சொல்வது சரியா? சினிமாக்கள், மில்கள் முதலியவற்றிற்கு அதிகமாகப் பகல் சப்ளை கொடுக்கும்போது விவசாயத்திற்கு மாத்திரம் ஏன் கொடுக்கக்கூடாது? இராக்காலங்களில்தான் கொடுக்கப்படும் என்பதைமாற்றி பகல் நேரத்தில் மின்சார வெட்டு இல்லாமல் விவசாயத்திற்கும் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமய ?

THE HON. SRI V. RAMIAH : இப்போது இருக்கக்கூடிய கஷடங்கள் எல்லாம் போகவேண்டுமானால் மின்சாரம் அதிகமாக உற்பத்தி செய்யப்பட வேண்டும். அதற்கு வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் சர்க்கார் எடுத்துக்கொண்டு வருகிறது.

Wattle plantations

* 392 Q.—SRI M. SELVARAJ (on behalf of Sri S. A. M. Annamalai Odayar) : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) the purpose for which the Government have acquired about 75 acres of lands with wattle plantations in Mulligoor village, Ootacamund taluk, Nilgiris district ; and

(b) the basis on which (i) purchase was made and (ii) compensation was paid to the parties concerned?

THE HON. SRI V. RAMIAH : (a) In connexion with the execution of the Kundah Hydro Electric Project, 174 acres of land in Mulligoor village in Ootacamund taluk in Nilgiris district consisting of tea, coffee and wattle plantations and waste lands are proposed to be acquired under the Land Acquisition Act.

(b) (i) Does not arise as the lands are proposed to be acquired under the Land Acquisition Act.